**செய்தி வெளியீடு எண் : 1977** **நாள் : 09.11.2022**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் எண்ணத்திற்கு உரு கொடுக்கும் வகையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் விளிம்பு நிலை மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே சமூக நீதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கையுடன் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

ஆதிதிராவிடர் மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே அவர்களுக்கான சமூக நீதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கையுடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஆதிதிராவிடர் மக்களின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும் பொருட்டு தேசிய ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் கடன் திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்த, ஏதுவாக கூடுதல் அரசு உத்தரவாதம் ரூ.20 கோடி வழங்கி அரசாணை(நிலை)எண்.96, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்.21.10.2022–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in